03.03.2026

I.D.O.P. No. 25/2017

**எ.சா.1 – ஆண்ட்ரூஸ் பிரான்சிஸ் சேவியர்**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

21.01.2016 ம் தேதி நான் இந்தியாவிற்கு வந்தேன் என்றால் சரிதான். என் மகனின் பிறந்த நாளுக்காக நான் வந்தேன். அவருக்கு உடைகள் மற்றும் செயின் வாங்கி வந்தேன், 7500 அமெரிக்கன் டாலர்கள் கொண்டு வந்தேன். அதற்கான ஆவணங்கள் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 21.01.2016 க்கு பிறகு என் மகன் பெயரில் ஏதாவது பணம் வைப்பீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கில் இடைமனுவில் கரூர் வைஸ்யா வங்கி மேலாளரை விசாரித்துள்ளேன் என்றால் சரிதான். அதன் மூலமாக என் மகன் பெயரில் ரூ.5,00,000/– டெபாசிட்டில் இருந்த விவரம் தெரிந்து கொண்டேன். அந்த பணம் என்னுடைய பணம் என்றால் சரிதான். அந்த பணத்தை நான் டெபாசிட் செய்யவில்லை என்றால் சரிதான். என் மனைவி எனக்கு தெரியாமல் டெபாசிட் செய்துள்ளார். அந்த பணத்தை நான் என் மனைவியிடம் கொடுக்கவில்லை. 2018 ம் ஆண்டு வரை அந்த பணம் வங்கியில்தான் இருந்தது என்றால் சரிதான். நான் அதற்கு பிறகு வெளிநாட்டிற்கு செல்லவில்லை, என்னுடைய Pass Port காணாமல் போய்விட்டது. நான் வெளிநாட்டிலிருந்து வரும்போது எடுத்து வந்த பணத்தை என் மனைவி, என் மகன் பெயரில் வங்கியில் வைப்பீடு வைக்கலாம் என்று ஆலோசனை கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை, எனக்கும் அந்த யோசனை இல்லை. 23.11.2016 ம்

தேதி என் மகனின் பிறந்த நாள், என் மனைவியின் வீட்டில் கொண்டாடப்பட்டது என்றால் சரியல்ல, என் வீட்டில் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் என் மனைவி, மகன் ஆகியோர்கள் என்னுடன்தான் இருந்தார்கள் என்றால் இருந்தார்கள். அவ்வாறு நாங்கள் இருந்தபோது எனக்கு வெளிநாட்டில் ஜோனா என்ற பெண்ணுடன் தொடர்பு இருப்பதாக என் மனைவி, என்னிடம் கேள்வி கேட்டாரா என்றால் கேட்டார், நான் இல்லை என்று சொன்னேன். அது சம்பந்தமாக எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. அந்த வாக்குவாதத்தின் விளைவாக நான் என் மனைவியையும் குழந்தையையும் அடித்து வீட்டை விட்டு விரட்டிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த நிகழ்வுக்கு இரண்டு நாட்கள் கழித்து என்மீது சமயபுரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரின்மீது இருவரையும் விசாரித்து அனுப்பிவிட்டார்கள் என்றால் சரிதான். வெளிநாட்டிலிருந்து கஷ்டப்பட்டு பணம் சம்பாதித்துக் கொண்டு வந்தால், என்மீது புகார் கொடுத்து விசாரணை வைக்கிறார்கள் என்று எனக்கு மனைவி மீது வருத்தம் இருந்ததா என்றால் அந்த காரணம் மட்டும் இல்லாமல், வேறு காரணங்களும் இருந்தது. என் மகனுக்கு மொட்டை அடிப்பதற்காக கூப்பிட்டபோது எனக்கு அவர்மீது இருந்த வருத்தம் காரணமாக அவருடன் மொட்டை அடிக்க சென்றால் ஒரு சுமூகமற்ற சூழ்நிலை இருக்கும் என்று போகவில்லை என்றால் சரியல்ல, என்னை அவர் அழைக்கவில்லை, என்னிடம் அந்த சமயத்தில் பணமும் இல்லை. நான் போலீசில் என் மனைவியின் குடும்பத்தார் மீது கொடுத்த புகாரை விசாரிக்கவில்லை என்று சொல்லியிருப்பது சரிதான். காவல்

கண்காணிப்பாளரும் விசாரிக்கவில்லை. நான் வெளிநாட்டிலிருந்து எடுத்து வந்த பணத்தை தான் என் மனைவி, என் மகன் பெயரில் டெபாசிட் செய்தார் என்ற விவரத்தை 2 மாதங்கள் கழித்து தெரிந்து கொண்டேன். நான் என் மனைவி அனுப்பியதாக சொல்லக்கூடிய வாட்ஸ்அப் செய்திகள் அவரின் கைபேசியிலிருந்து அனுப்பப்படவில்லை என்றாலும், என்னுடைய தொழில்நுட்ப அறிவை பயன்படுத்தி நானே உற்பத்தி கொண்டவை என்று சொன்னால் சரியல்ல. குடும்ப பிரச்சனை என்னுடைய வேலைக்கு ஏதாவது தொந்தரவு ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. அதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் ஆதாரம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது. எங்களுடைய நிறுவனம் அதை தனிப்பட்ட ஆவணமாக வைத்துள்ளதால் அதை கேட்கமுடியாது. என்னிடம் அதற்கான நகல் உள்ளதா என்றால் உள்ளது, அது ரகசியமானது என்பதால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது. அவ்வாறு எந்த ஆவணமும் என்னிடம் இல்லை என்றாலும், குடும்ப பிரச்சனை காரணமாக என்னுடைய வேலைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றாலும், அதனால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்ய மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய ரேஷன் கார்டிலிருந்து என் மனைவியின் பெயரை நீக்கிவிட்டேன் என்றால் தெரியாது. நானும், என் மனைவியும் பிரிந்த பிறகு சேர்ந்து வாழ்வதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பாஸ்போர்ட் வாங்குவதற்காக அஞ்சலகம் சென்றபோது, என் மனைவி அங்கு வந்து என்னுடைய பாஸ்போர்ட்டை பறித்துவிட்டு சென்றதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் என்மீது பதியப்பட்ட

குற்ற வழக்கு முடிவடையவில்லை என்றாலும், அது நிலுவையில் உள்ளது என்றாலும் சரியல்ல. நான் தன்னிச்சையாக கட்டுபாடு இல்லாத வாழ்க்கை வாழ்வதற்கு என் மனைவியும், குழந்தையும் இடையூறாக இருப்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என் மனைவி தற்போது வரை சேர்ந்து வாழ்வதற்கு தயாராக உள்ளார் என்றாலும், நான்தான் தயாராக இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் மகன் இருங்களூர் டான் போஸ்கோ பள்ளியில் 5 ம் வகுப்பு படிக்கிறான். குழந்தையின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு இருவரும் சேர்ந்து வாழவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.03.03 16:52:46 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.